**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.09.2025**
**OS. No. 36/2018**
**வழக்கு சாட்சி PW.3– மணி, த/பெ.பெரியசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

5) பிரதிவாதிகளின் தந்தை பெயர் மாரிமுத்து ஆகும். தாவா சொத்திற்குண்டான அ–பதிவேடு பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆதியில் ச.எண்.360/1C யார் பெயரில் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்து எந்த பட்டா எண்ணில் வரும் என்றால் பட்டா எண்.780 ல் வரும். அந்தபட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தில்லை, பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளதை வைத்து சொல்கிறேன். அந்த பத்திரம் எத்தனை ரூபாய் முத்திரை தாளில் எழுதப்பட்டிருந்தது என்றால் தெரியவில்லை. அந்த பத்திரம் எத்தனை தாள்கள் கொண்டது என்றால் தெரியவில்லை. ச.எண்.360/1C ல் கண்ட நிலம் எவ்வளவு விஸ்தீரணம் கொண்ட நிலம் என்று தெரியுமா என்றால் தெரியாது. ச.எண்.360/1C ஆனது பிரதிவாதிகளின் தந்தை மாரிமுத்துவிற்கு பாத்தியப்பட்டது என்றும், அதை தவறுதலாக வாதிகள் பாகபத்திரம் எழுதும் போது சேர்த்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. மாரிமுத்து தற்போது இறந்துவிட்டார். அவர் இறந்த தேதி தெரியுமா என்றால் 2014 ல் இறந்துவிட்டார். அது சம்மந்தமாக ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை, நான் அவரது இறுதி சடங்கிற்கு சென்றுள்ளேன், அதை வைத்து சொல்கிறேன். நான் சொல்வது தவறு என்றும், மாரிமுத்து 28.04.2016 ல் தான் இறந்தார் என்றும், அதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்பே அவர் இறந்துவிட்டதாகவும், அவரது இறுதி சடங்கிற்கு நான் சென்றதாகவும் வாதி சொல்லி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் நிரூபண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள்

குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வழங்கப்படவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தார் என்றால் வாதி குழந்தைசாமி தான் அழைத்து வந்தார். வாதி குழந்தைசாமி இன்றைய தினம் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். எங்களுக்கும், மாரிமுத்து குடும்பத்தாருக்கும் கொடுக்கல், வாங்கல் இருந்தது என்றால் சரிதான், அது 2016 ல் முடிந்துவிட்டது. மேற்கண்ட மாரிமுத்துவிடம் தான் காட்டை வைத்து நாங்கள் பணம் பெற்றிருந்தோம், 2016 ல் அவரசு வாரிசுகளான பிரதிவாதிகளிடம் பணம் கொடுத்து முடித்துவிட்டோம். மேற்கண்ட சங்கதிகளை எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) எந்த மாதம், எந்த தேதி, எவ்வளவு பணம் மாரிமுத்துவின் வாரிசுகளிம் கொடுத்தோம் என்றால் எனக்கு நினைவில்லை. 2016 ல் நாங்கள் பணம் செலுத்தியதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் அடமானம் ரத்து செய்த பத்திரம் உள்ளது. அந்த கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக 2016 ல் எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் மனஸ்தாபம் என்றும், அந்த பணத்தை கொடுக்காமல் அவர்களை ஏமாற்றவதற்காக அவர்களிடம் விரோதம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றும், தற்போதும் அதற்காகத்தான் வாதியுடன் சேர்ந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் என்ன உறவுமுறை என்றால் அத்தை மகன், மாமன் மகன் ஆவார்கள். வழக்கு சொத்து குறித்து என்னென்ன ஆவணங்கள் 2000 ல் இருந்து யார் யார் பெயரில் இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கும், பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை என்றால் தெரியாது.

8) வழக்கு சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் காவல் நிலையத்திற்கும் சென்று வந்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இரு தரப்பினர்களுக்கும் என்ன பிரச்சனை என்று தெரியுமா என்றால் 65 சென்ட் நிலம் சம்மந்தமாக பிரச்சனை என்று தெரியும், அந்த 65 சென்ட் நிலம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் பத்திரதில் பார்த்தபோது ச.எண்.360/1C ல் உள்ளதாக தெரிந்து கொண்டேன். பத்திரத்தை நான் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். மேற்கண்ட

பத்திரத்தில் என்ன சக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. தற்போது நிலையிலும் என்ன சக்குபந்தி உள்ளது என்று தெரியுமா என்றால் வடக்கு, மேற்கு சாலை செல்கிறது, மற்ற திசை தெரியவில்லை.

9) பிரதிவாதிகள் வாதியிடம் சொத்து சம்மந்தமாக என்ன கேட்டார்கள், எப்போது கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தான ச.எண்.360/1C க்கு பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்றும், அதற்கு சம்மந்தமில்லாத வாதி அவர்களது குடும்பத்தார்களான மாமன், மச்சான்கள் அவர்களுக்குள் பாகபிரிவினை ஏற்படுத்திக்கொண்டபோது தவறுதலாக மேற்கண்ட சர்வே எண்ணை மட்டும் சேர்த்து எழுதி கொண்டனர் என்றும், அது குறித்து தெரியவந்தவுடன் பிரதிவாதிகள் அவர்களிடம் அதை சரி செய்து பிழைதிருத்தல் பத்திரம் எழுதி கொள்ளுமாறு தெரிவித்தார்கள் என்றும், சரி என்று ஒப்புக்கொண்டு சில காலம் கடத்தி வந்து, பின்னிட்டு அவர்கள் ஒப்புக்கொண்டவாறு செய்து கொள்ளாதால் இந்த பிரச்சனை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் வாயிலாக தெரிவிக்கப்பட்டதுஎன்றும், அங்கு நடந்த விசாரணையிலும் வாதி திருத்தல் பத்திரம் எழுதி கொள்வதாக ஒப்புக்கொண்டு வந்து இந்த வழககை பொய்யாக தாக்கல் செய்துள்ளார் என்றும், இன்றளவும் வழக்கு சொத்துகள் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்றும், தற்போது பிரதிவாதிகளின் குடும்பத்தில் பிரச்சனை ஏற்படுத்திக்கொண்டு எதிரிக்கு எதிரி தனக்கு நண்பன் என்ற வகையில் வாதி என்னை அழைத்து வந்து என்ன வழக்கு என்று தெரியாமலேயே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) இந்த வழக்கில் என்ன சொத்து விவரம் சொல்லப்பட்டுள்ளது, அதற்கு என்ன சங்கதிகள் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்கண்ட சர்வே எண்ணில் எத்தனை வீடுகள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட சர்வே எண்ணில் உள்ள சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அங்கு 3 வீடுகள் உள்ளது என்றும், அதில் பிரதிவாதிகள் உள்ளார்கள் என்றும், அவர்கள் பெயரில் தான் வரி ரசீதுகள், மின்

கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி அழைத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.